V8T

விருதுநகர் மாவட்டப் பள்ளிகள்

முதல் இடைப் பருவ பொதுத் தேர்வு - ஆகஸ்ட் 2022

-----

## வகுப்பு 8

நேரம்: 1.30 மணி | தமிழ் | மதிப்பெண்கள்: 50

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:** 7×1=7

1) மக்கள் வாழும் நிலப்பகுதியைக் குறிக்கும் சொல் .............
அ) வைப்பு ஆ) கடல் இ) பரவை ஈ) ஆழி

2) பறவைகள் ............. பறந்து செல்கின்றன.
அ) நிலத்தில் ஆ) விசும்பில் இ) மரத்தில் ஈ) நீரில்

3) தமிழ் எழுத்துச் சீர்திருத்தப் பணியில் ஈடுபட்டவர்
அ) பாரதிதாசன் ஆ) தந்தை பெரியார்
இ) வ.உ.சிதம்பரனார் ஈ) பெருஞ்சித்திரனார்

4) 'நன்செய்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது .............
அ) நன்+செய் ஆ) நன்று+செய் இ) நன்மை+செய் ஈ) நல்+செய்

5) வானில் கரு ............. தோன்றினால் மழை பொழியும் என்பர்.
அ) முகில் ஆ) துகில் இ) வெயில் ஈ) கயல்

6) பால்+ஊறும் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ..............
அ) பால் ஊறும் ஆ) பாலூறும் இ) பால்லூறும் ஈ) பாஊறும்

7) பின்வருவனவற்றுள் இறந்தகால வினைமுற்று .............
அ) படித்தான் ஆ) நடக்கிறான் இ) உண்பான் ஈ) ஓடாது

**II. பொருத்துக: பறவைகளின் ஒலி மரபு** 3×1=3

1) குயில் - கொக்கரிக்கும்
2) கோழி - கூவும்
3) புறா - அகவும்
- குனுகும்

**III. கலைச்சொல் எழுதுக:** 2×1=2

1) valley
2) bud

**IV. எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளி:** 4×2=8

1) தமிழ் எங்குப் புகழ் கொண்டு வாழ்கிறது?
2) உலகம் எவற்றால் ஆனது?
3) ஓவிய எழுத்து என்றால் என்ன?
4) ஓடை எவ்வாறு ஓடுவதாக வாணிதாசன் கூறுகிறார்?
5) புயல் காற்றினால் தொண்டைமான் நாட்டில் ஏற்பட்ட அழிவு யாது?

**V.** "தமிழ்மொழி வாழ்த்து" என்னும் பாடலில் உள்ள மனப்பாடப் பகுதியை அடிபிறழாமல் எழுது. 5

**VI. எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளி:** 2×4=8

1) எழுத்துச் சீர்திருத்தத்தின் தேவை குறித்து எழுதுக.
2) ஓடையின் பயன்களாக வாணிதாசன் கூறுவன யாவை?
3) நீர்நிலைகள் குறித்துச் சியாட்டல் கூறியுள்ளவற்றை எழுதுக.

**VII. எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளி:** 2×5=10

1) எழுத்துகளின் தோற்றம் குறித்து எழுதுக.
2) இயற்கைச் சீற்றங்களால் பாதிப்பு ஏற்படாமல் தவிர்க்கச் செய்ய வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளாக நீங்கள் எவற்றைக் கருதுகிறீர்கள்?
3) 'வெட்டுக்கிளியும் சருகுமானும்' கதையைச் சுருக்கி எழுதுக.

**VIII.** 1) விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்ற உங்கள் நண்பனுக்குப் பாராட்டுக் கடிதம் எழுதுக. 1×7=7

----------